දුරකථන/ தொலைபேசி / Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister } 0112784832, Fax - 0112784825

ලේකම් / செயலாளர் / Secretary } 0112784811, Fax - 0112785162

කාර්යාලය / அலுவலகம் / Office } 0112785141-50, Fax - 0112785491

ඊ-තැපැල් / மின்னஞ்சல் / E-mail- info@moe.gov.lk

වෙබ් ලිපිනය / இணையதள முகவரி Web address- www.moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No } ..............................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ, බත්තරමුල්ල.
'இசுருபாய', ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை, பத்தரமுல்லை.
'Isurupaya', Sri Jayawardanapura Kotte, Baththaramulla.


මගේ අංකය / எமது இல. / My No } ED/08/26/23/02/04

දිනය / திகதி / Date } 2017.01.25

**சுற்றறிக்கை இல : 09/2016**

கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,
சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்.

**அரச பல்கலைக் கழகங்களில் சேர்வதற்கு நேரலை (ஒன்லைன் on line) ஊடாக விண்ணப்பங்களை அனுப்பும் முறை - 2016/2017 கல்வியாண்டு.**

2016/2017 கல்வியாண்டு முதல் பல்கலைக் கழகங்களுக்கு நேரலை (on line) ஊடாக மாத்திரம் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்வதற்கு பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு தீர்மானம் செய்துள்ளது. அதற்கு அமைய அரச பல்கலைக் கழகங்களுக்கு விண்ணப்பிக்கும் போது முக்கியமாக கவனிக்க வேண்டிய விடயமான, முறைப்படி வடிவமைக்கப்பட்ட விண்ணப்பத்தை நிரப்புவதற்கான அறிவுறுத்தல்கள் தொடர்பில் மாகாண மற்றும் வலய தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப இணைப்பாளர்கள், வலய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள் அத்துடன் மாகாண மற்றும் வலய தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப இணைப்பாளர்களுக்கு தெளிவாக விளக்கமளிக்கும் வேலைத் திட்டம் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நடாத்தப்பட்டுள்ளது.

இந்த குழுவை ஈடுபடுத்தி தங்களின் வலயத்தில் / மாகாணத்தில் உயர்தர வகுப்புகள் உள்ள பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு தெளிவாக விளக்கம் அளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அன்புடன் அறியத் தருகின்றோம்.

மேலும், தங்கள் மாகாணத்தால் இதற்கு முன்னர் பெயர் குறிக்கப்பட்ட மாகாண / வலய தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப மையங்கள் ஊடாக வடிவமைக்கப்பட்ட பல்கலைக் கழக அனுமதிக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு இலவச (கட்டணம் அறிவிடப்படாத) வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதன் பொருட்டு பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுவினால் மையங்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படும்.

அவ்வாறே பல்கலைக் கழக அனுமதி கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மாகாண / வலய தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப மையங்களுக்கு வடிவமைக்கப்பட்ட பல்கலைக் கழக அனுமதி விண்ணப்பங்களை நேரலையூடாக சமர்ப்பிப்பதற்கு தேவையான வசதிகளைச் செய்து கொடுக்குமாறு இத்தால் அன்புடன் அறியத்தருகின்றோம்.

சுனில் ஹெட்டியாராச்சி,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

நகல் :-

1. தலைவர் - பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு
2. மாகாண கல்விச் செயலாளர் - த.அ.கொ.